சிகரத்தின்
# தினத் தென்றல்
SIGARATTHIN DHINATHENDRAL    தமிழ் சமுதாயத்தின் குரல்    TAMIL DAILY    Rs. 4
Vol: 13 ● Issue: 201  11.10.2026 ● ஞாயிற்றுக்கிழமை ● சென்னை ● கோவை ● திருச்சி ● திருநெல்வேலி ● பக்கம் 6 ● விலை ரூ.4





**மருத்துவமனைகளில் சேவையின் தரம், அவசர சிகிச்சை வசதிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்**

**சந்திரபாபு நாயுடுவை முதல்வர் விஜய் சந்திக்க திட்டம்!**

**அரசு முதுநிலை மருத்துவர்களுக்கான தற்காலிக பணி மாறுதல் ஆணை**










## பூந்தமல்லி- வடபழனி மெட்ரோ ரயில் சேவையை தொடங்கி வைக்க

# பிரதமர் மோடி இன்று சென்னை வருகை

**○ சென்னையில் 15,000 போலீஸார் குவிப்பு!**

**○ அடுக்கு பாதுகாப்பு, ட்ரோன்கள் பறக்க தடை**

**சென்னை, அக்.11:** பிரதமர் நரேந்திர மோடி (அக்.11) சென்னை வருகிறார்.

சென்னை மெட்ரோ ரயில் 2-ம் கட்ட திட்டப் பணிகளின் ஒரு பகுதியாக நிறைவடைந்துள்ள பூந்தமல்லி- வடபழனி வரையிலான 14.64 கி.மீ. தொலைவிலான சேவையைத் தொடங்கி வைக்கிறார். பின்னர் முதல்வர் விஜய்யுடன் பூந்தமல்லியில் இருந்து போரூர் வரை மெட்ரோ ரயிலில் இணைந்து பயணம் செய்கிறார்.

மேலும் ஐஐடி-யில் இயங்கி வரும் 10-க்கும் மேற்பட்ட முன்னணி ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் நிறுவனர்களை சந்தித்து கலந்துரையாடுகிறார்.

பின்னர் 'இசைஞானி இளையராஜா இசை கற்றல் மற்றும் ஆராய்ச்சி மையத்தை' பிரதமர் திறந்து வைக்கிறார்.

பல்வேறு தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்து, புதிய திட்டப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

'அம்ரித் பாரத்' திட்டத்தின் கீழ், தெற்கு ரயில்வேயில், மேம்படுத்தப்பட்ட பழநி, பரமக்குடி, நாமக்கல், அம்பா சமுத்திரம், வேலூர் கன்டோன்



மென்ட் ரயில் நிலையங்கள், கோவை பகுதியில் 3 ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் காரைக்கால் - பேரளம் இடையே 23 கி.மீ. புதிய ரயில் பாதை என ரூ.700 கோடி மதிப்பிலான திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

அது மட்டுமல்லாமல் விமான நிலையத்தில் இருந்து பரங்கிமலை ராணுவ மைதானம் வரை, சைதாப்பேட்டை நீதி



### வடபழனி மெட்ரோ வழித்தடத்தில் இணைப்பு பேருந்து சேவை: மாநகர போக்குவரத்து கழகம்

பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ வழித்தடத்தில் இணைப்பு பேருந்து சேவை வழங்கப்படவுள்ளதாக மாநகர போக்குவரத்து கழகம் அறிவித்துள்ளது.

சென்னையில் பூந்தமல்லி-வடபழனி இடையேயான மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி (அக். 11) தொடங்கி வைக்கிறார்.

நெடுநாள் காத்திருப்புக்குப் பிறகு, பூந்தமல்லி - வடபழனி இடையே மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட உள்ள நிலையில், அந்த வழித்தடத்தில் இணைப்பு பேருந்து சேவையை சென்னை மாநகர போக்குவரத்து கழகம் வழங்கவுள்ளது.

இதுகுறித்து மாநகர போக்குவரத்து கழகம் தனது எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது:

சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டத் திட்டத்தின் கீழ் பூந்தமல்லி பைபாஸ் - போரூர் சந்திப்பு - வடபழனி மெட்ரோ வழித்தடத்தில் மாநகர் போக்குவரத்துக் கழகம் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்துடன் இணைந்து இணைப்பு பேருந்து சேவையை மேம்படுத்தவுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பணிகள் நிறைவடைந்து அனுமதியும் கிடைத்த பிறகும், சுமார் ஏழு மாதங்களாக சேவை தொடங்கப்படாமல் பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரயில் சேவை கிடப்பில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

மன்றம் அருகில் இருந்து அண்ணா பல்கலை. வரை 'ரோடு ஷோ' செல்கிறார்.

பிரமரின் சென்னை வருகையை ஒட்டி 15 ஆயிரம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட உள்ளனர். மேலும் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்பு காரணங்களுக்காக 11-ம் தேதி மீனம்பாக்கம், கிண்டி, கோட்டூர்புரம், போரூர், நந்தம்பாக்கம் ஆகிய பகுதிகள் மற்றும் பிரதமர் பயணிக்கும் வழித்தடங்கள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அதோடு இந்த பகுதிகளில் ட்ரோன் கேமராக்கள் மற்றும் ஆளில்லா வான்வழிக் கருவிகள் பறக்கவிடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் செல்லும் அனைத்து பகுதிகளும் போலீஸாரின் கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதுமட்டும் அல்லாமல் லாட்ஜ்கள், தங்கும் விடுதிகள், ஓட்டல்களில் தங்கியுள்ளவர்கள் குறித்தும், முக்கிய சாலைகளில் தீவிர வாகன சோதனையிலும் போலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

---

## முதல்வர் விஜய்யுடன் ராகுல் காந்தி சந்திப்பு!

**மதிய விருந்துடன் ஆலோசனை!**

**சென்னை, அக்.11:** சென்னை பாலவாக்கத்தில் உள்ள தனியார் உணவகத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும் முதல்வர் விஜய்யும் உணவருந்தினர்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ராகுல் காந்தி நேற்று பிற்பகல் சென்னை வந்தார்.

டில்லியில் இருந்து விமானம் மூலமாக சென்னை விமான நிலையம் வந்த அவரை தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

அங்கிருந்து ராகுல் காந்தி, முதல்வர் விஜய்யின் நீலாங்கரை இல்லத்திற்குச் சென்றார். அங்கு இருவரும் கூட்டணி குறித்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து பேசியதாகத் தெரிகிறது.

பின்னர் நீலாங்கரை இல்லத்தில் இருந்து ராகுல், விஜய் இருவரும் ஒரே காரில் பயணித்து சென்னை பாலவாக்கத்தில் உள்ள தனியார் உணவகத்திற்குச் சென்று உணவருந்தினர்.

அங்கிருந்து ராகுல் காந்தி சென்னை தனியார் சொகுசு



விடுதிக்குச் சென்று சற்று ஓய்வெடுத்து பின்னர் மாணவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

சென்னையில் முதல்வர் விஜய் பதவியேற்பு நிகழ்ச்சிக்குப் பிறகு, டில்லியில் ராகுல் காந்தி வீட்டுக்கு முதல்வர் விஜய் சென்ற நிலையில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு இரு தலைவர்களும் சந்தித்துப் பேசுவது அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

## டில்லியில் போராட்டம் நடத்திய சிபிஎம் மூத்த தலைவர்கள் கைது!

**புதுடில்லி, அக்.11:** தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக டில்லியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்களை காவல்துறையினர் கைது செய்துள்ளனர். சிபிஎம் மூத்த தலைவர்கள் பிரிந்தா காரத், ஷைலஜா, ஜான் பிரிட்டாஸ் எம்.பி., பினராயி விஜயன் ஆகியோர் கைதாகியுள்ளனர். அதேபோல, மத்தியக்குழு உறுப்பினர் கே. பாலபாரதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் பெ. சண்முகம், கே. பாலகிருஷ்ணன், மாணிக் சர்க்கார், ஜி. ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் புராரி காவல்நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாக சிபிஎம் தகவல் தெரிவித்துள்ளது.

## தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை அக்.17-ம் தேதி தொடங்க வாய்ப்பு!

**சென்னை, அக்.11:** தமிழகத்தில் தென்மேற்குப் பருவமழை 20 சதவீதம் குறைவாக பெய்துள்ளது. கடந்த ஏப்ரல் முதலே கடும் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. இதனால் பல்வேறு நீர்த்தேக்கங்கள், ஏரிகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழல், செம்பரம்பாக்கம், பூண்டி, வீராணம் உள்ளிட்ட ஏரிகளின் மொத்த கொள்ளளவு 13,222 மில்லியன் கனஅடி.

ஆனால் தற்போது 4,730 மில்லியன் கனஅடி மட்டுமே நீர் இருப்பு உள்ளது. இது மொத்த கொள்ளளவில் 35.77 சதவீதம் ஆகும். சென்னை உட்பட தமிழகம் முழுவதும் நீர் தேவையை பூர்த்தி செய்ய வடகிழக்குப் பருவமழையை எதிர்நோக்கி காத்திருக்கிறது.

நாட்டில் தென்மேற்குப் பருவமழை விலகி வருகிறது. ஏற்கெனவே உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத், ராஜஸ்தான் உள்ளிட்ட பகுதிகளில் விலகிவிட்டது. தற்போது மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், கர்நாடகா, தெலங்கானா, ஒடிசாவின் சில பகுதிகளில் தென்மேற்கு பருவமழை விலகி வருகிறது. அதைத் தொடர்ந்து, அக்.17-ம் தேதி தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்க



வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்ததாவது: அந்தமான் கடல் பகுதியில் அக்.11-ம் தேதி (நாளை) வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாக வாய்ப்பு உள்ளது. இதன் தாக்கத்தால் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்பு உள்ளது. இது மேலும் வலுப்பெற்று அதற்கடுத்து வரும் 4 நாட்களில் வட தமிழகம் மற்றும் தெற்கு ஆந்திரக் கடலோரப் பகுதிகளை நெருங்கும். இது புயலாக வலுப்பெற வாய்ப்பு இல்லை. இந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியால் காற்று வீசும் திசையில் மாற்றம் ஏற்பட்டு, பின்னர் 17-ம் தேதி வடகிழக்கில் இருந்து தமிழகம் நோக்கி காற்று வீசும். அதுமுதல் வடகிழக்குப் பருவமழை தொடங்கும்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

சிகரத்தின் தினத்தென்றல்

# மகாளய அமாவாசையையொட்டி தாமிரபரணி ஆற்றங்கரையில் முன்னோர்களுக்கு தர்ப்பணம்!



**திருநெல்வேலி, அக்.11:** புரட்டாசி மாத மகாளய அமாவாசையையொட்டி, திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றங்கரையில் ஆயிரக்கணக்கானோர் தங்களது முன்னோர்களுக்கு தர்ப்பணம்கொடுத்து (சனிக்கிழமை) வழிபட்டனர்.

ஒவ்வொரு மாதமும் வரும் அமாவாசை தினங்களில் பொது மக்கள் தங்களது முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து வழிபடுவது வழக்கம். குறிப்பாக, தை மற்றும் ஆடி மாத அமாவாசை தினங்களில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தால், ஆண்டு முழுவதும் அவர்களை வழிபட்ட பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

அதேபோல், புரட்டாசி மாதத்தில் வரும் மகாளய அமாவாசை தினத்தில் முன்னோர்களுக்கு திதி கொடுத்து வழிபட்டால், தங்களது வம்சத்தினருக்கும், அடுத்தடுத்த தலைமுறையினருக்கும் நன்மைகள் கிடைக்கும் என்பது இந்து சமய மக்களின் நம்பிக்கையாக உள்ளது.

### தாமிரபரணியில் குவிந்த மக்கள்

இதையொட்டி, மகாளய அமாவாசையான அதிகாலை முதலேதிருநெல்வேலிமாவட்டத்தில் உள்ள நீர்நிலைகளில் பொதுமக்கள் திரண்டு முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர்.

குறிப்பாக, வற்றாத ஜீவநதியான தாமிரபரணி ஆற்றங்கரையில் ஏராளமானோர் குவிந்தனர். குறுக்குத்துறை முருகன் கோவில் அருகே ஆயிரக்கணக்கானோர் திரண்டு, ஆற்றில் புனித நீராடி தங்களது முன்னோர்களுக்கு திதி கொடுத்து வழிபட்டனர்.

இதேபோல், வண்ணாரப்பேட்டை பேராச்சியம்மன் கோவில் படித்துறை உள்ளிட்ட பகுதிகளிலும் ஏராளமானோர் புனித நீராடி முன்னோர்களை வழிபட்டனர்.

# வந்தே பாரத் ரெயிலில் கேட்பாரற்று கிடந்த ரூ.1.30 லட்சம் பொருட்கள் மீட்பு

**சென்னை, அக்.11:** சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்துக்கு கோவையில் இருந்து வந்த வந்தே பாரத் ரெயிலில் கேட்பாரற்று கிடந்த ரூ.1.30 லட்சம் மதிப்புள்ள பொருட்களை மீட்ட ஆர்.பி.எப். போலீசார் அதனை உரிய நபரிடம் ஒப்படைத்தனர்.

சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்துக்கு நேற்று முன்தினம் கோவையில் இருந்து வந்தே பாரத் ரெயில் ஒன்று வந்தது. இந்த ரெயிலில் பயணிகள் அனைவரும் இறங்கி சென்றதும் ஆர்.பி.எப். போலீசார் ஒவ்வொரு பெட்டிகளாக சென்று சோதனை செய்தனர். அப்போது ஒரு பெட்டியில் கேட்பாரற்று ஒரு பை கிடந்தது. அந்த பையை போலீசார் சோதனை செய்தபோது அதில் ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பில் விலை உயர்ந்த செல்போனும் ரூ.10 ஆயிரம் பணமாகவும் இருந்தது. இதனை கைப்பற்றிய போலீசார், மீட்கப்பட்ட பொருளை தொலைத்த பயணியிடம் ஒப்படைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே தன் பையைத் தொலைத்துவிட்டு பதறியடித்துக்கொண்டு அந்த பயணி போலீசாரை அணுகினார். உடனே அதிகாரிகள் அந்த பயணியின் பயணச்சீட்டு உள்ளிட்ட விவரங்களை முழுமையாகச் சரிபார்த்து, அந்தப்பை அவருடையது தான் என்பதை உறுதிசெய்து பின்னர் அவரிடம் பத்திரமாக ஒப்படைத்தனர்.

# இடைத்தேர்தலில் தோற்றுப்போனவர்கள் ஏதாவது ஒரு விளக்கத்தை சொல்லத்தானே வேண்டும் - வைகோ

**சென்னை, அக்.11:** சென்னை எழும்பூரில், தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் இலங்கையின் உள்நாட்டுப் போரிலும் உயிர்நீத்த தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்திய பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, திமுக மற்றும் அதிமுக தலைவர்கள் தீவிரமாகப் பிரசாரம் செய்தும் வெற்றி பெற முடியவில்லை என்று விமர்சித்தார்.

மேலும், விஜய் மீது முன்வைக்கப்பட்ட கடுமையான விமர்சனங்களையும் மக்கள் புறந்தள்ளியுள்ளதாகத் தெரிவித்தார்.

தமிழகத்தில் 'கமிஷன், கலெக்ஷன்' என்ற பேச்சுகளுக்கு இடமில்லை என்பதை இந்த வெற்றி உறுதிப்படுத்தியுள்ளதாகவும், மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளில் தவெக வேட்பாளர்கள் பெற்ற வெற்றி ஆட்சிக்குக் கிடைத்த அங்கீகாரம் என்றும் குறிப்பிட்டார்.

"தோற்றுப்போனவர்கள் ஏதாவது ஒரு விளக்கத்தை சொல்லத்தானே வேண்டும்" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் விமர்சனத்திற்கு வைகோ பதில் அளித்தார்.

## க்ரைம் கார்னர்

# வேலைவாய்ப்பு அலுவலகம் அமைத்து பல லட்சம் மோசடி செய்த 3 பேர் கைது



**சென்னை, அக்.11:**

சென்னை கொளத்தூரைச் சேர்ந்த 26 வயது பெண் ஒருவர், வீட்டிலிருந்து பணிபுரியும் வேலை தேடி வந்தார். கடந்த மே 20-ம் தேதி ராயப்பேட்டையில் உள்ள வணிக வளாகத்துக்குச் சென்றபோது, தனியார் நிறுவனத்தின் மனிதவளப் பிரிவு அதிகாரி என அறிமுகப் படுத்திக் கொண்ட பெண் ஒருவர், பின்னர் அவரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு தங்கள் நிறுவனத்தில் வேலை இருப்பதாகக் கூறியுள்ளார். மேலும், வீட்டிலிருந்து வேலை செய்வதற்காக லேப்- டாப்பில் மென்பொருள் நிறுவ ரூ.4,500 முன்பணம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இதனை நம்பிய அந்தப் பெண், ஜி-பே மூலம் ரூ.4,500 செலுத்தியுள்ளார். ஆனால், பணத்தைப் பெற்ற பிறகு வேலை குறித்த எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை. இதுகுறித்து அண்ணா சாலை காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. இதன் பேரில் மோசடி மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டப்பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதையடுத்து, மோசடிக்கு மூளையாக செயல்பட்ட ஆரோனை போலீஸார் கைது செய்தனர்.

அவர் கொடுத்த தகவலின்பேரில் அவரது கூட்டாளிகளான மாதவரத்தைச் சேர்ந்த கோகுல்நாத் (26), கொடுங்கையூரைச் சேர்ந்த அஜ்மல் பாஷா (32) ஆகிய மேலும் இருவரை போலீஸார் கைது செய்தனர். மேலும் பலரை தேடி வருகின்றனர். விசாரணையில், கைது செய்யப்பட்ட 3 பேரும் குழுவாகச் செயல்பட்டு, சுமார் 500 பேரிடம் ரூ.25 லட்சம் வரை மோசடி செய்துள்ளதாக தெரிய வந்துள்ளது. விசாரணை நடத்தினர். பின்னர் காளிமுத்துவை கைது செய்தனர்.

# சென்னை: கத்தி முனையில் மாணவனிடம் செயின் பறித்தவர் கைது

**சென்னை, அக்.11:**

உதவி கேட்பதுபோல் நடித்து, மாணவனிடம் கத்தி முனையில் மிரட்டி தங்கச் செயினைப் பறித்தவர் கைது செய்யப்பட்டார்.

சென்னை கல்பாளையம், சூரியா நகரைச் சேர்ந்த 17 வயது சிறுவன், அதே பகுதியில் உள்ள பள்ளி ஒன்றில் 12-ம் வகுப்பு படித்து வருகிறார். கடந்த 6-ம் தேதி மாலை, வீட்டின் அருகே உள்ள இடத்தில் டியூஷன் முடித்து விட்டு சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

அப்போது, வழியில் அந்த மாணவனை ஒருவர் இடைமறித்து லிப்ட் கேட்டுள்ளார். ஆள் நடமாட்டம் இல்லாத இடத்துக்கு மாணவனை அழைத்துச் சென்ற அந்த நபர், கத்தியைக் காட்டி மிரட்டி, மாணவனின் தங்கச் செயினைப் பறித்துக் கொண்டு தப்பிச் சென்றார்.

இதுகுறித்து புழல் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. விசாரணையில், மாணவனிடம் நகையைப் பறித்துச் சென்றது சென்னை கொளத்தூர், லட்சுமிபுரத்தைச் சேர்ந்த கதிர்வேல் (39) என்பது தெரியவந்தது.

இதையடுத்து, தலைமறைவாக இருந்த அவரை போலீஸார் கைது செய்தனர். அவரிடமிருந்து மாணவனிடம் பறிக்கப்பட்ட தங்கச் செயினும் மீட்கப்பட்டது. வேலைக்குச் செல்லாமல் கதிர்வேல் வழிப்பறியில் ஈடுபட்டுள்ளார் என்பது தெரியவந்தது.

# சிஜேபி போராட்ட முன்னெடுப்பு, போலீஸ் கெடுபிடிகளால் டில்லியில் கடும் போக்குவரத்து நெரிசல்

**புதுடில்லி, அக்.11:** தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி டெல்லி ஜந்தர் மந்தரில் இன்று (சனிக்கிழமை) கரப்பான்பூச்சி ஜனதா கட்சி (சிஜேபி) சார்பில் போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்துக்கு டெல்லி காவல்துறை அனுமதி அளிக்கவில்லை. எனவே, போராட்டம் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்யும் நோக்கில் 15 ஆயிரம் போலீஸாரும், 23 ஆயிரம் மத்திய பாதுகாப்புப் படையினரும் களத்தில் இறக்கப்பட்டுள்ளனர். தடையை மீறி போராட முயல்பவர்களை அவர்கள் கைது செய்து வருகின்றனர். தடையை மீறி போராட்டம் நடத்த முயன்ற சிஜேபியின் நிறுவனர் அபிஜித் தீப்கே, டெல்லி விமான நிலையத்திலும், சிபிஎம் பொதுச் செயலாளர் எம்.ஏ. பேபி ஜந்தர் மந்தர் அருகிலும் கைது செய்யப்பட்டனர். மேலும் பலர், நகரின் பல பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். போராட்டங்கள், கைது போன்ற நடவடிக்கைகள், போலீசாரின் சோதனைகள், பிரதான சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள தடுப்புகள் போன்றவை காரணமாக மத்திய டெல்லியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

# மருத்துவமனைகளில் சேவையின் தரம், அவசர சிகிச்சை வசதிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் - வானதி சீனிவாசன்

**சென்னை, அக்.11:** மருத்துவ மனை களில் மருத்துவச் சேவையின் தரம், அவசர சிகிச்சை வசதிகள் மற்றும் மருத்துவர்களின் பொறுப்புணர்வு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-



கோவை தெலுங்குபாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று பிரசவத்திற்காக மருத்துவமனைக்குச் சென்ற கர்ப்பிணிப் பெண் உயிரிழந்ததாக வெளியாகியுள்ள செய்தி மிகுந்த வேதனையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்துகிறது. ஒரு குடும்பத்தின் நம்பிக்கையாக இருந்த தாயின் உயிரும், உலகைக் காண வேண்டிய குழந்தையின் உயிரும் பறிபோனதாகக் கூறப்படும் இந்தச் சம்பவம் சாதாரணமான ஒன்றல்ல.

மருத்துவம் என்பது உயிரைக் காக்கும் உன்னதமான சேவை. ஆனால், மருத்துவச் சிகிச்சையில் அலட்சியம் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டிருந்தால், அதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே, இந்தச் சம்பவம் குறித்து மாவட்ட நிர்வாகமும் சுகாதாரத் துறையும் உடனடியாகத் தலையிட்டு, நேர்மையான விசாரணை நடத்த வேண்டும். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், விசாரணையின் அடிப்படையில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உரிய இழப்பீடும் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட வேண்டும்.

இனி இதுபோன்ற துயரச் சம்பவங்கள் நிகழாமல் இருக்க அரசு மருத்துவமனைகளிலும் தனியார் மருத்துவமனைகளிலும் மருத்துவச் சேவையின் தரம், அவசர சிகிச்சை வசதிகள் மற்றும் மருத்துவர்களின் பொறுப்புணர்வு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் நடத்தை விதிகள் வாபஸ்; திருப்பூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் அரசு திட்டங்கள் மீண்டும் அமல்

**சென்னை, அக்.11:** தேர்தல் நடத்தை விதிகள் வாபஸ் பெறப்பட்ட நிலையில் திருப்பூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் அரசு திட்டங்கள் அமலுக்கு வந்துள்ளன.




தமிழக சட்டசபைக்கு கடந்த ஏப்ரல் மாதம் நடந்த பொதுத்தேர்தலில், 108 இடங்களை வென்று தனிப்பெரும் கட்சியாக த.வெ.க. உருவெடுத்தது. தி.மு.க. கூட்டணியில் இருந்த காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மற்றும் 2 கம்யூனிஸ்டு கட்சிகளின் ஆதரவுடன் த.வெ.க. கூட்டணி ஆட்சி அமைத்தது. முதல்-அமைச்சராக விஜய் பதவியேற்றார். அவருடைய தலைமையிலான அமைச்சரவையில் காங்கிரஸ், வி.சி.க., இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் இடம் பெற்றுள்ளன.

### இடைத்தேர்தல் அறிவிப்பு

இந்த நிலையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), சத்தியபாமா (தாராபுரம்) ஆகியோர் தங்களுடைய எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து விட்டு, த.வெ.க.வில் இணைந்திருந்தனர். இதனால் காலியான அந்த இரு தொகுதிகளுக்கு, தேர்தல் ஆணையம் தரப்பில் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. கடந்த 6-ந்தேதி வாக்குப்பதிவு நடந்து, நேற்று வாக்கு எண்ணிக்கையும் நடந்து முடிந்தது.

இதில், 2 தொகுதிகளிலும் ஆளும் த.வெ.க. சார்பில் வேட்பாளர்களாக களம் இறக்கப்பட்ட மரகதம் குமரவேல், சத்தியபாமா ஆகியோர் வெற்றி பெற்றனர். த.வெ.க. வேட்பாளர் மரகதம் குமரவேல் மதுராந்தகம் தொகுதியில், 74 ஆயிரத்து 48 வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெற்றார். தி.மு.க. வேட்பாளர் பரந்தாமன் 54 ஆயிரத்து 8 வாக்குகள் பெற்று 2-ம் இடம் பிடித்தார். அ.தி.மு.க. வேட்பாளர் கணிதா சம்பத் 47 ஆயிரத்து 450 வாக்குகள் பெற்று 3-ம் இடத்திற்கு தள்ளப்பட்டார்.

### அரசு திட்டங்கள்

இதேபோன்று, த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமா தாராபுரம் தொகுதியில், 66,841 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவருக்கு அடுத்தபடியாக தி.மு.க. வேட்பாளர் சுகன்யா 57,370 வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்தை பிடித்தார்.

அ.தி.மு.க. வேட்பாளர் பானுமதி 45,280 வாக்குகளை பெற்று 3-ம் இடத்துக்கு தள்ளப்பட்டார்.

தாராபுரம் மற்றும் மதுராந்தகம் இடைத்தேர்தலில் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், திருப்பூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் தேர்தல் நடத்தை விதிகள் மற்றும் பறக்கும் படைகள் வாபஸ் பெறப்பட்டன.

இதனால், புதிய அரசு திட்டங்களை செயல்படுத்த இனி தடையில்லை. இதனை தொடர்ந்து திருப்பூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் அரசு திட்டங்கள் மீண்டும் அமலாகின்றன. இரு மாவட்டங்களிலும் 'தாய்மாமன் தங்க மோதிரம்', 'வெற்றிப்பயண திட்டம்' ஆகியவை அமலுக்கு வருகின்றன.

# புரட்டாசி 4-வது சனிக்கிழமை எதிரொலி: திருமலையில் பக்தர்கள் அதிகரிப்பு



**திருமலை, அக்.11:** திருப்பதி ஏழுமலையானை இந்த புரட்டாசி 4-வது சனிக்கிழமையன்று தரிசிக்க, திருமலையில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்துள்ளது.

இதனால், தர்ம தரிசனம் செய்ய நேற்று 8 முதல் 10 மணி நேரம் ஆனது. இந்த புரட்டாசி மாதத்தில் தமிழகம், புதுவை, கர்நாடகா, தெலங்கானா மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்து அதிக அளவில் பக்தர்கள் திருமலைக்கு வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக, தமிழக பக்தர்களின் கூட்டம் அதிகமாக உள்ளது. பலர் மஞ்சள் ஆடை உடுத்தி, கோவிந்த மாலை அணிந்து, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் இருந்து திருமலைக்கு நேர்த்திக் கடனாக நடந்து வந்து, விரதத்தைத் திருமலையில் நிறைவு செய்கின்றனர்.

தற்போது 4-வது சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை வருவதாலும், தசரா விடுமுறை என்பதாலும் திருமலைக்கு பக்தர்களின் வருகை அதிகமாகவே உள்ளது.

# அரசு முதுநிலை மருத்துவர்களுக்கான தற்காலிக பணி மாறுதல் ஆணை: அமைச்சர் அருண்ராஜ் விளக்கம்



**சென்னை, அக்.11:** அக்டோபர் 2026-ல் படிப்பை முடிக்கும் அரசு முதுநிலை மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தற்காலிகப் பணி மாறுதல் ஆணை குறித்து மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருண்ராஜ் விளக்கம் அளித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

அக்டோபர் 2026-ல் படிப்பை முடிக்கும் அரசு முதுநிலை மருத்துவர்களுக்கான (SERVICE PGS 2023 - 2026 ஆம் கல்வியாண்டு) தற்காலிகப் பணி மாறுதல் ஆணை குறித்து எழும் விமர்சனங்கள் குறித்து மருத்துவர்களுக்கும், பொதுமக்களுக்கும் விரிவான விளக்கத்தை அளிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக கடந்த ஆண்டுகளில் மருத்துவப் படிப்புகளுக்கான கல்வி மற்றும் கலந்தாய்வு கால அட்டவணைகளில் பெரும் காலதாமதம் ஏற்பட்டன. சென்ற ஆண்டு அக்டோபர் 2025-ல் முதுநிலை படிப்பு முடித்த மருத்துவர்களுக்கான கலந்தாய்வு டிசம்பர் 2025-ல் தான் நடைபெற்றது.

இடைப்பட்ட மூன்று மாதங்களுக்கான ஊதியம் வழங்குவது மற்றும் இதர பணி சார்ந்த நடைமுறைகளில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டன. இவ்வாறான அட்டவணை மாறுபாட்டினால் இந்த ஆண்டு படிப்பை முடித்து வெளியேறும் மருத்துவர்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதை நமது புதிய அரசு முன்கூட்டியே கணித்து, அவர்களின் நலனை மட்டுமே முதன்மையாகக் கருத்தில் கொண்டே இந்த உடனடி தீர்வு தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த தற்காலிக நியமனங்கள் கூட மருத்துவர்கள் தாங்கள் அளித்த படிவத்தில் குறிப்பிட்ட 3 விருப்ப இடங்களின் (TOP 3 CHOICES) அடிப்படையிலேயே மிகுந்த கவனத்துடன் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒருவேளை அவர்கள் கோரிய இடங்களில் காலிப்பணியிடம் இல்லை என்றால், மருத்துவர்களின் குடும்பச் சூழலைக் கருத்தில் கொண்டும், அவர்கள் வெகு தூரத்திற்கு இடம்பெயர்வதில் உள்ள பெரும் சிரமங்களைத் தவிர்க்கும் நோக்கிலும், அவர்களுக்கு அருகாமையிலேயே உள்ள இடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன.

# தூத்துக்குடியில் கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு: மீனவர்கள் போராட்டம்



**தூத்துக்குடி, அக்.11:** கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தால் தங்களது வாழ்வாதாரமும், பாரம்பரிய கரைவலை மீன்பிடித் தொழிலும் முற்றிலும் பாதிக்கப்படுவதாகக் கூறி, தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் மீனவர்கள் இன்று கடலுக்குள் படகுகளை நிறுத்தி தீவிர முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் தூத்துக்குடி கடற்கரை மற்றும் துறைமுக வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தூத்துக்குடி முல்லக்காடு பகுதியில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்திற்கான ஆலை அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த ஆலையில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீராலும், கடல் பகுதியில் மேற்கொள்ளப்படும் கட்டுமானங்களாலும் கடற்கரையை யொட்டி பாரம்பரியமாக செய்யப்படும் 'கரைவலை' மீன்பிடித் தொழில் முற்றிலும் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மேலும், இதனால் கடல்வளம் மற்றும் மீன்வளமும் கடுமையாக பாதிக்கப்படும் என மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## திடீர் கடலோர முற்றுகை

கடந்த சில நாட்களாக கடலில் பலத்த காற்று வீசியதால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்லாமல் இருந்தனர். இந்நிலையில், நேற்று (சனிக்கிழமை) காற்று குறைந்ததைத் தொடர்ந்து மீனவர்கள் மீண்டும் கடலுக்குள் சென்றனர். அப்போது, தங்களின் வாழ்வாதாரத்தை அச்சுறுத்தும் இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், தங்களது மீன்பிடிப் படகுகளுடன் தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகப் பகுதியை முற்றுகையிட்டு கடலின் நடுவே திரண்டு தங்களது கண்டனங்களைப் பதிவு செய்தனர்.

## கோரிக்கை

பாரம்பரிய கரைவலை மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காக்க, அரசு உடனடியாக இந்த விவகாரத்தில் தலையிட்டு நன்னீராக்கும் திட்டப் பணிகளை நிறுத்த வேண்டும் என்றும், தங்களுக்கு தகுந்த வாழ்வாதாரப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் போராட்டக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மீனவர்களின் இந்த திடீர் கடலோரப் போராட்டத்தைத் தொடர்ந்து, அசம்பாவிதங்களைத் தவிர்க்க கடலோரப் பாதுகாப்புப் படையினரும் போலீசாரும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

# சாலையில் மழை நீர் தேங்கியதால் பொதுமக்கள் பாதிப்பு





திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட 16வது வார்டு மற்றும் முன்னாள் மேயர் வார்டு பகுதியான டவுன் பகுதியில் அமைந்துள்ள உழவர் சந்தை சாலை பாதாள சாக்கடை பணியின் போது தோண்டப்பட்ட பள்ளம் சரிவர சீர் செய்யாததால் சாலையில் மழை நீர் தேங்கி இருப்பதால் பொதுமக்கள் நடப்பதற்கு சிரமம் ஏற்பட்டுள்ளது அந்தப் பகுதியில் கண்டிப்பேரி அரசு மருத்துவமனை உள்ளதாலும் ஆயிரக்கணக்கான நோயாளிகள் வந்து செல்வதற்கு சிரமப்படுகின்றனர் ஆகையால் உடனடியாக மாநகராட்சி உழவர் சந்தை சாலையை சீர் செய்து தர வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அனுமதியின்றி செயல்படும் குவாரி மீது நடவடிக்கை: அமைச்சர் பிரபு தகவல்

**பரமக்குடி, அக்.11:** தமிழகத்தில் அனுமதியில்லாமல் செயல்படும் மணல், கல் குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என கனிமவளத் துறை அமைச்சர் பிரபு தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உள்ள இமானுவேல் சேகரனாரின் மணிமண்டபத்தில் அவரது 102-வது பிறந்த நாள் விழா அரசு சார்பில் நேற்று நடைபெற்றது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மதன்ராஜா, கனிம வளத் துறை அமைச்சர் பிரபு ஆகியோர் இமானுவேல் சேகரனாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் பல்வேறு துறைகளின் சார்பில் 76 பேருக்கு ரூ.78.95 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் பிரபு கூறும்போது, "தமிழகத்தில் அனுமதி இல்லாமல் செயல்படும் கல் மற்றும் மணல் குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அனுமதி பெற்ற குவாரிகளில் இருந்து கல், மணல் எடுத்துச் செல்லும் லாரிகளில் ஜிபிஎஸ் கருவி கட்டாயமாக பொருத்தப்பட வேண்டும் என்ற நடைமுறை செயல்படுத்தப்பட்டு வருகிறது" என்றார்.

# நிச்சயம் தமிழகத்தின் முதல்வராக எடப்பாடியார் வருவார் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் உறுதி





**கரூர், அக்.11:** கழக பொதுச் செயலாளர் எடப்பாடியாரின் ஆணைக்கிணங்க, தமிழகம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டம் தோறும், சனிக்கிழமை வாரம் அதிமுக அம்மா பேரவை ஆலோசனை கூட்டம் நடைபெற்று வருகிறது. இதனை தொடர்ந்து கரூர் மாவட்ட அம்மா பேரவை சார்பில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் சக்திவேல் தலைமையில் நடைபெற்றது.

இதற்கு கழக புரட்சித்தலைவி அம்மா பேரவை செயலாளரும், முன்னாள் அமைச்சர், மதுரை புறநகர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளருமான ஆர். பி . உதயகுமார், கழக அமைப்புச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ம. சின்னச்சாமி, கரூர் மாவட்ட கழகச் செயலாளர் கமலக்கண்ணன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர் இந்நிகழ்ச்சியில் மாவட்ட அம்மா பேரவை தலைவர் பொன்னுசாமி வரவேற்புரை ஆற்றினார் மாவட்ட அம்மா பேரவை பொருளாளர் வெற்றிவேல் நன்றியுரை ஆற்றினார் மற்றும் மாவட்ட அம்மா பேரவை நிர்வாகிகள், ஒன்றிய அம்மா பேரவை செயலாளர்கள், நகர அம்மா பேரவை செயலாளர்கள் பேரூர் அம்மா பேரவை செயலாளர்கள் பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றிய கழகச் செயலாளர்கள், பகுதி அம்மா பேரவை செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் பேரூர் கழகச் செயலாளர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

ஆர். பி. உதயகுமார் பேசியதாவது : தற்பொழுது 2 இடைத்தேர்தலில் தீர்ப்பு நமக்கு மாறி வந்துள்ளது . ஆனால் தீர்ப்பு அதிமுகவை அசைக்க பார்க்க முடியாது அதிமுக ஆலமரம் என்பதை நிரூபிக்கவண்ணம் இன்றைக்கு கரூர் மாவட்ட அம்மா பேரவை கூட்டம் உணர்த்தி உள்ளது.

2 இடைத்தேர்தலின் தீர்ப்பு குறித்து இன்றைக்கு கருத்துக்களை பரிமாறிக் கொண்டிருக்கின்றார்கள் . புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்களால் உருவாக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தை, அம்மா தன் உயிரைக் கொடுத்து வளர்த்த இயக்கத்தை, எடப்பாடியார் என்ற சாமானிய தலைவர், இன்றைக்கு மக்களுடைய நம்பிக்கை பெற்ற தலைவராக களத்திலே கடுமையாக மக்களுக்காகவும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்திற்காக உழைத்து வருகிறார் என்பதை இந்த நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்து இருக்கிறார்கள். சவால்களும், சோதனைகளும் உடன்பிறந்த பிள்ளைகளை போல தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது அதை முறியடித்துதான் மக்களுடைய நம்பிக்கையை பெற்று களத்தில் அதிமுக மக்களுக்காக உழைத்து கொண்டு வருகிறது. அதிமுக தொடங்கப்பட்ட நாள் முதல் அதிமுகவை அளிப்போம் என்று திமுக கூறியது ஆனால் இன்றைக்கு திமுக களம் ஓய்ந்து விட்டது . கடந்த சட்டமன்றத் தேர்தலில் தரையில் கால் படாத விஜயை இடைத்தேர்தலில் தண்ணீர் குடிக்கவைத்து முருங்கைக்காய் பறிக்க வேண்டிய இயக்கம் தான் அதிமுக. கடந்த சட்டமன்றத் தேர்தலில் பத்துக்கு மேற்பட்ட இடங்களில் தான் விஜய் பிரச்சாரம் செய்தார் ஆனால் இந்த 5 மாதத்தில் விஜயை தண்ணீர் குடிக்க வைத்த இயக்கம் அதிமுக .இதன்மூலம் விஜயின் சாயம் வெளுத்து விட்டது. திரைகள் ஹீரோவாக இருந்த விஜய் இன்றைக்கு தரையில் ஜீரோவாக மாறி விட்டார். கடந்த சட்டமன்ற 29 சதவீதம் வாக்குகளை பெற்ற தவெக தற்பொழுது 37% தான் வாக்குகளை பெற முடிந்தது .இன்றைக்கு 63 % வாக்குகள் எதிர்க்கட்சிகள் பெற்றுள்ளது .இதன் மூலம் தவெக கட்சியை 63 % மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை .வெற்றிச் சான்றிதழ் பெற்று இருக்கலாம் ஆனால் மக்கள் துரோகத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுதான் இதன் மூலம் தெரிகிறது.

குதிரை பேரத்திற்கு தமிழக மக்கள் துணை நிற்க மாட்டார்கள் என்பது தெரிய வருகிறது. 63% மக்கள் ஆளுங்கட்சிக்கு எதிராக தான் உள்ளார்கள் .இரண்டு நாட்கள் விசிலை ஊதினாலும் மக்கள் சரியான தீர்ப்பை வழங்கியுள்ளார்கள்.

கடந்த நான்கு மாதம் கடுமையான மின்வெட்டு, விலைவாசி உயர்வு , சட்ட ஒழுங்கு சீர்கேடு, போதைப் பொருள் நடமாட்டம், பெண்களுக்கு பாலியல் தொந்தரவு, லாக்அப் மரணங்கள் உள்ளது. தேர்தல் விதிமுறை மீறி தாய் மாமன் திட்டம், பெண்களுக்கு இலவச பேருந்து பயணம் என்பதெல்லாம் தேர்தல் பயத்தில் தொடங்கி வைத்தார். ஆனால் இன்றைக்கு ஜனநாயகம் வலிமை உண்மை புரிந்துள்ளது.

54 ஆண்டு கால அரசியல் வரலாற்றில் 31 ஆண்டுகாலம் மக்களுக்காக சேவை செய்து அதிமுக 1300 சட்டமன்ற உறுப்பினர்கள், 200 மேற்பட்ட அமைச்சர்கள், 250க்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு லட்சம் மேற்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் ஒரு லட்சம் மேற்பட்ட தொண்டர்களை கூட்டுறவு சங்கங்களில் பச்சைமையில் கையெழுத்து போட வைத்துள்ளது. தமிழகத்தில் மீண்டும் எடப்பாடியார் முதலமைச்சராக வருவார் அதற்கு கரூர் இடைத்தேர்தல் இரட்டை இலை வெற்றி அச்சாரமாக அமையும் என கூறினார்.

## வணிகச் செய்திகள்

### செயற்கைக்கோள் மூலம் 100% நெட்வொர்க் புதிய திட்டத்துடன் களம் இறங்கும் ஜியோ நிறுவனம்



**புதுடில்லி, அக்.11:** இந்தியாவின் மிகப்பெரிய தொலைத் தொடர்பு நிறுவனமாக விளங்கும் ரிலையன்ஸ் ஜியோ, மொபைல் டவர்கள் மற்றும் ஃபைபர் கேபிள்களை மட்டுமே நம்பியிருக்காமல், செயற்கைக்கோள்கள் மூலம் தனது நெட்வொர்க் சேவையை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது. இதற்காக, சுமார் 1,600 செயற்கைக்கோள்கள் மற்றும் இந்தியா முழுவதும் 23 தரை நிலையங்களைக் கொண்ட புதிய தொழில்நுட்பக் கட்டமைப்பை உருவாக்க அந்நிறுவனம் முடிவு செய்துள்ளது.

டெல்லியில் நடைபெற்ற 10-வது தொலைதொடர்பு மாநாட்டில் ஜியோ நிறுவனம் தனது செயற்கைக்கோள் இணைப்பு திட்டங்களை காட்சிப்படுத்தியது. வழக்கமான தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பை உருவாக்குவது கடினமாக உள்ள இந்தியாவின் பகுதிகளை சென்றடைவதற்காக, தற்போதுள்ள தரைவழி வலையமைப்புடன் செயற்கைக்கோள்களையும் பயன்படுத்தும் நோக்குடன், இந்த திட்டத்தை அந்நிறுவனம் 'இறையாண்மை செயற்கைக்கோள் இணைப்பு' என்று முன்வைக்கிறது. இந்த கலப்பு செயற்கைக்கோள்-தரை அமைப்பின் மூலம் 6 லட்சத்துக்கும் அதிகமான கிராமங்கள், நிலப்பரப்புகள் மற்றும் கடல் பகுதிகள் அனைத்தும் 100 சதவீத கவரேஜ் பெறும் என்று ஜியோ நிறுவனம் தெரிவித்துள்ளது. குறிப்பாக தொலைதூர பகுதிகள், தீவுகள் மற்றும் எல்லைப் பகுதிகளில் இந்தச் சேவை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மின்சார வாகன விற்பனை இதுவரை இல்லாத அளவாக 74% உயர்வு

**புதுடில்லி, அக்.11:** ஆட்டோமொபைல் டீலர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு (எப்ஏடிஏ) வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இந்தியாவில் மின்சார வாகனச் சந்தை கடந்த செப்டம்பர் மாதம் இதுவரை இல்லாத அளவில் சில்லறை விற்பனையை பதிவு செய்துள்ளது. மொத்த விற்பனை 3 லட்சத்து 33 ஆயிரத்து 634 யூனிட்டுகள் விற்பனையாகி உள்ளன. இது முந்தைய ஆண்டின் இதே மாதத்துடன் ஒப்பிடுகையில் 74% அதிகமாகும்.

பல்வேறு வகையான வாகனப் பிரிவுகளில் மின்சார வாகனங்களின் பயன்பாட்டு விகிதம் கடந்த செப்டம்பரில் சுமார் 13% உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு இது மாதத்தில் இது சுமார் 10% ஆக இருந்தது.' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிகரத்தின்
தினத்தென்றல்





VM
Residential Plots

# KUMARAN HIGHWAY CITY

## KUTHAMBAKKAM, POONAMALLEE




| PLOT NO | EXTENT SQ.FT | PLOT NO | EXTENT SQ.FT |
|---|---|---|---|
| 1 | 1402 | 41 | 972 |
| 2 | 938 | 42 | 972 |
| 3 | 944 | 43 | 960 |
| 4 | 938 | 44 | 948 |
| 5 | 941 | 45 | 960 |
| 6 | 944 | 46 | 960 |
| 7 | 947 | 47 | 627 |
| 8 | 953 | 48 | 816 |
| 9 | 959 | 49 | 934 |
| 10 | 969 | 50 | 1080 |
| 11 | 981 | 51 | 1188 |
| 12 | 975 | 52 | 948 |
| 13 | 938 | 53 | 960 |
| 14 | 950 | 54 | 640 |
| 15 | 950 | 55 | 1678 |
| 16 | 950 | 56 | 1449 |
| 17 | 950 | 57 | 1031 |
| 18 | 950 | 58 | 630 |
| 19 | 950 | 59 | 681 |
| 20 | 950 | 60 | 693 |
| 21 | 950 | 61 | 693 |
| 22 | 950 | 62 | 693 |
| 23 | 950 | 63 | 489 |
| 24 | 950 | 64 | 384 |
| 25 | 1518 | 65 | 600 |
| 26 | 1309 | 66 | 600 |
| 27 | 1000 | 67 | 600 |
| 28 | 1000 | 68 | 588 |
| 29 | 1000 | 69 | 588 |
| 30 | 1000 | 70 | 600 |
| 31 | 1000 | 71 | 600 |
| 32 | 1000 | 72 | 495 |
| 33 | 1000 | 73 | 384 |
| 34 | 1000 | 74 | 459 |
| 35 | 1000 | 75 | 682 |
| 36 | 1000 | 76 | 658 |
| 37 | 1000 | 77 | 642 |
| 38 | 1000 | Commercial 1 | 4637 |
| 39 | 988 | Commercial 2 | 10148 |
| 40 | 777 | | |

## INDUSTRIAL PRESENCE AND DEVELOPMENT CLOSER TO THE LAND

NISSAN · HYUNDAI · SAINT-GOBAIN GLASS · apollo · SAMSUNG · PERLOS · FOXCONN

JABIL · caparo · NOKIA Connecting People · DELL · MOTOROLA · FLEXTRONICS

# Valli Mayil Properties

130/4B, Redhills Road, 1st Floor, Pudur, Ambattur, Chennai-53.

muthaiah.kvb@gmail.com

www.vallimayilproperties.com

Contact

**9080420748**

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல்: வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைப்பு!




**சென்னை, அக்.11:** தமிழ்நாடு சட்டமன்றத்தின் 35. மதுராந்தகம் (தனி) மற்றும் 101. தாராபுரம் (தனி) ஆகிய சட்டமன்றத்தொகுதிகளுக்கான இடைத்தேர்தல், 2026 வாக்கு எண்ணிக்கைக்கு பின்னர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகளை பாதுகாப்பாக வைத்தல். இது தொடர்பாக, தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு சட்டமன்றத்தின் 35. மதுராந்தகம் (தனி) மற்றும் 101. தாராபுரம் (தனி) ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை 09.10.2026-ஆம் நாளன்று இரண்டு வாக்கு எண்ணும் மையங்களில் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.

தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள்/ தேர்தல் முகவர்கள் மற்றும் வாக்கு எண்ணுகை முகவர்களின் முன்னிலையில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றுள்ளது. வாக்கு எண்ணுகை நடைமுறையின்போது தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களும்/தேர்தல் முகவர்களும் வாக்கு எண்ணுகையிட முகவர்கள் இருந்தனர். வாக்குகள் எண்ணப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரால் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

வாக்குஎண்ணிக்கைநிறைவடைந்த பின்னர் வேட்பாளர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கண்காணிப்புக் கேமரா (CCTV) மற்றும் பாதுகாப்பு கண்காணிப்பின்கீழ், வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளிலிருந்து (VVPATS) அவற்றின் சீட்டுகள் (VVPAT SLIPS) வெளியே எடுக்கப்பட்டு, சட்டப்படியாக ஆவணங்கள் வைக்கப்பட்டுள்ள காப்பறையில் பாதுகாப்பாக வைக்கப்படுவதற்காக கருப்பு நிற உறைகளுக்குள் வைக்கப்பட்டுள்ளன.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை வேட்பாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் காப்பறையில் பாதுகாப்பாக வைப்பதற்கு முன்னர், வேட்பாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூடி முத்திரையிடப்பட்டுள்ளன.

தேர்தல் வழக்குகளின் (ELECTION PETITIONS) பட்டியலை சென்னை ஐகோட்டு இறுதி செய்யும் வரையில், இந்திய தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு நெறிமுறையின்படி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் காப்பறையில் பாதுகாப்பாக வைக்கப்படும்.

ஒருவேளை தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்யப்படு ம்பட்சத்தில், தேர்தல் வழக்குகள் இறுதியாக தீர்வு செய்யப்படும் வரையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் காப்பறையில் தொடர்ந்து வைக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அ.தி.மு.க.வின் 55ஆம் ஆண்டு தொடக்கம்: தமிழ்நாடு முழுவதும் பொதுக்கூட்டங்கள் அறிவிப்பு



**சென்னை, அக்.11:** அ.தி.மு.க.வின் 55ஆம் ஆண்டு தொடக்க நாளையொட்டி அக்.17, அக்.22, 23ம் தேதிகளில் தமிழ்நாடு முழுவதும் பொதுக்கூட்டங்கள் நடைபெறும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

அ.தி.மு.க.வின் 55ஆவது ஆண்டை முன்னிட்டு தொடக்கவிழா பொதுக்கூட்டம் அக்.17, 22, 23 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்.17ம் தேதி செங்கல்பட்டு மேற்கு மாவட்டத்தில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பங்கேற்க உள்ளதாக அ.தி.மு.க. தலைமை அறிவித்துள்ளது.

முன்னாள் அமைச்சர்கள் தங்கமணி, கே.பி. அன்பழகன் மற்றும் எஸ்.பி.வேலுமணி, நத்தம் விஸ்வநாதன் உள்ளிட்டோர் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. சி.வி.சண்முகம் பெயர் பட்டியலில் இடம்பெறவில்லை.

# சந்திரபாபு நாயுடுவை முதல்வர் விஜய் சந்திக்க திட்டம்!

**சென்னை, அக்.11:** சென்னையின் குடிநீர் தேவைக்காக, தெலுங்கு கங்கை திட்டத்தின் கீழ் ஆந்திர அரசு ஆண்டுதோறும் 12 டி.எம்.சி கிருஷ்ணா நதி நீரை மாநில எல்லையில் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டும். இருப்பினும், இந்த ஆண்டு அக்டோபர் 9-ம் தேதி வரை தமிழகத்திற்கு 2.251 டி.எம்.சி. அடி நீர் மட்டுமே கிடைத்தது. இது மட்டுமின்றி, ஆந்திராவிலிருந்து தமிழகத்துக்குள் வரும் ஆறுகளில் அணை கட்டவும் அந்த மாநில அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதனால் தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய உரிய நீர் கிடைப்பதில் சிக்கல் எழக்கூடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, இவ்விவகாரங்கள் குறித்து பேச்சு வார்த்தை நடத்தவும், நதிநீர் இணைப்பு குறித்து ஆலோசனை நடத்தவும் தமிழக முதல் அமைச்சர் விஜய், வரும் 13-ம் தேதி விஜயவாடா செல்கிறார். விஜயவாடாவில் ஆந்திர முதல் மந்திரி சந்திரபாபு நாயுடு மற்றும் துணை முதல்வர் பவன் கல்யாண் ஆகியோரை விஜய் சந்தித்து பேச இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும், இது தொடர்பாக



அதிகாரப்பூர்வ அறிவிப்பு ஏதும் தற்போது வரை வெளியாகவில்லை.

முன்னதாக, காவிரி நதி நீர் விவகாரம் தொடர்பாக முதல் அமைச்சர் விஜய் கடந்த ஆகஸ்ட் மாதம் கர்நாடகா செல்ல திட்டமிட்டு இருந்தார். காவிரியில் தமிழகத்திற்கு நீர் திறக்க எதிர்ப்பு தெரிவித்து கன்னட அமைப்புகள் தீவிர போராட்டம் நடத்தி வந்ததால், தற்போதைக்கு கர்நாடகாவுக்கு வரவேண்டாம் என்று அம்மாநில முதல் மந்திரி டிகே சிவக்குமார், விஜய்க்கு கோரிக்கை வைத்தார். இதையடுத்து முதல் அமைச்சர் விஜய்யின் கர்நாடக பயண திட்டம் ரத்தானது.

# இந்து சமய அறநிலையத்துறை புகார்களை இனி ஆன்லைனில் தெரிவிக்கலாம் - அமைச்சர் ரமேஷ்

**சென்னை, அக்.11:** பொதுமக்களின் கோரிக்கைகளைப் பெற்றுச் செயல்படுத்த எனது பிரத்தியேக இணையதளத்தை அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என அமைச்சர் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;-

ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சார்ந்த புகார்கள், கோரிக்கைகள் மற்றும் கருத்துகளைத் தெரிவிக்க எனது பிரத்தியேக இணையதளம்!

தமிழ்நாடு முதல்-அமைச்சர் தளபதி ச. ஜோசப் விஜய்யின் நல்லாசியுடன், என்மீது நம்பிக்கை வைத்து என்னை வெற்றிபெறச் செய்த ஸ்ரீரங்கம் தொகுதி மக்களின் நலனுக்காகவும், இந்து சமய அறநிலையத்துறை சார்ந்த பொதுமக்களின் கோரிக்கைகளைப் பெற்றுச் செயல்படுத்தவும் எனது பிரத்தியேக இணையதளத்தை அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இணையதளம்: HTTPS://TVKRAMESH.IN

இந்த இணையதளத்தின் வாயிலாகப் பொதுமக்கள் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே தங்களது புகார்கள், கோரிக்கைகள் மற்றும் கருத்துகளை எளிதாகப் பதிவு செய்யலாம். மேலும், தங்களது மனுக்கள் மீதான நடவடிக்கைகளின் நிலையை அறிந்துகொள்ளவும் வழிவகை செய்யப்படும். புகார்கள் மற்றும் கோரிக்கைகளைத் தெரிவிக்க பிரத்யேக அலைபேசி எண்கள்:+91 98430 88410 +91 86810 88410

இந்த எண்கள் வாயிலாகவும் ஸ்ரீரங்கம் தொகுதி பொதுமக்கள் தங்களது புகார்கள் மற்றும் கோரிக்கைகளை உரிய ஆதாரங்களுடன் எனது அலுவலகத்திற்குத் தெரிவிக்கலாம். அவற்றின் மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வாயிலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தேவையான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும். மக்களுக்கும் மக்கள் பிரதிநிதிக்கும் இடையிலான தொடர்பை எளிமைப்படுத்தி, மக்களின் குறைகளுக்கு விரைவான தீர்வு காண்பதற்கான ஒரு பயனுள்ள தளமாக இந்த இணையதளம் அமையும். மக்களின் குரலுக்குச் செவிசாய்ப்போம்! மக்களின் குறைகளைத் தீர்ப்போம்! மக்கள் சேவையில் தொடர்ந்து பயணிப்போம்! வெற்றி நிச்சயம்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலக முட்டை தினத்தை முன்னிட்டு 10,000 வேக வைத்த முட்டைகள் இலவசமாக விநியோகம்

**நாமக்கல், அக்.11:** உலக முட்டை தினத்தை முன்னிட்டு, நாமக்கல்லில் கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் சார்பில் பொதுமக்களுக்கு 10,000 வேக வைத்த முட்டைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமை உலக முட்டை தினமாக உலகளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், நேற்று (வெள்ளிக்கிழமை) அன்று நாமக்கல் பூங்கா சாலையில் தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் சார்பில் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவில் சங்கத் தலைவர் சிங்கராஜ் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு வேக வைத்த முட்டைகளை வழங்கி விநியோகத்தைத் தொடங்கி வைத்தார்.




இந்த விழாவில் பொதுமக்களுக்கு 10,000 வேக வைத்த முட்டைகள் இலவசமாக வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து மனித உடலுக்குத் தேவையான புரதச்சத்துக்கள் முட்டையில் அதிகளவில் உள்ளதைக் குறித்தும், தினமும் ஒரு முட்டை சாப்பிடுவதன் அவசியம் குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செய்திகள் துண்டு காகிதங்கள் மூலம் வழங்கப்பட்டன.

முட்டை உற்பத்தி குறித்து பேசிய பண்ணையாளர்கள், சமீபகாலமாக கோழித்தீவன மூலப்பொருட்களான மக்காச்சோளம் மற்றும் சோயா புண்ணாக்கு ஆகியவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் கோழிப்பண்ணைத் தொழில் பெரும் பாதிப்பைச் சந்தித்து வருவதாக கவலை தெரிவித்தனர். பொதுமக்கள், முதியவர்கள் மற்றும் குழந்தைகள் எனப் பலரும் இந்த நிகழ்வில் ஆர்வத்துடன் கலந்துகொண்டு முட்டைகளை பெற்று சென்றனர்.

# ரேஷன் கடைகளில் குறைந்த விலையில் வெங்காயம் விற்பனை

## 3-வது கட்டமாக 700 மெட்ரிக் டன் கொள்முதல்

**சென்னை, அக்.11:** சென்னை கோயம்பேட்டில் மொத்த விலையில் நாசிக் வெங்காயம் ஒரு கிலோ ரூ.50-க்கும், சில்லறை விலையில் ரூ.70-க்கும் விற்கப்படுகிறது. மேலும், ஆந்திரா வெங்காயம் கோயம்பேட்டில் மொத்த விலையில் ரூ.40-க்கும், சில்லறை விற்பனையில் ரூ.50-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், வெங்காயத்தை தமிழக அரசே கொள்முதல் செய்து, கூட்டுறவுத் துறையின்கீழ் இயங்கும் ரேஷன் கடைகள் வாயிலாகஒருகுடும்பஅட்டைக்கு 1 கிலோ வெங்காயம் ரூ.35 என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இதுவரை 2 கட்டங்களாக வெங்காயம் கொள்முதல் செய்யப்பட்டு



விற்பனை செய்யப்பட்டது. தற்போது 3-வது கட்டமாக 700 மெட்ரிக் டன் வெங்காயத்தை தேசிய நுகர்வோர் கூட்டுறவில் இருந்து தமிழக அரசு கொள்முதல் செய்துள்ளது. இந்த வெங்காயம் சென்னை,தண்டையார்பேட்டை சரக்கு ரயில் முனையத்துக்கு நேற்று வந்தடைந்தது. இதை கூட்டுறவுத்துறை அமைச்சர் வ.காந்திராஜ் பார்வையிட்டு, ரேஷன் கடைகள் மூலம் விற்பனை செய்யும் பணிகளைத் தொடங்கி வைத்தார்.






சிகரத்தின்

# தினத்தென்றல்

RNI: NO TNTAM/2013/55872 Postal R.No: TN/CC(S)DN/525/15-17

E.MAIL: dhinathendral@gmail.com Ph:044 - 79690504, 98400 83174




## இந்திய பைலட் ஸ்மித் மச்சாருக்கு இஸ்ரேல் அரசின் வீரதீர விருது



**டெல் அவிவ், அக்.11:** விமான கடத்தலை தடுத்த இந்திய பைலட் ஸ்மித் மச்சாருக்கு உலகம் முழுவதிலும் இருந்து பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன. இந்நிலையில் இஸ்ரேல் அரசின் வீரதீரச் செயல் விருது ஸ்மித் மச்சாருக்கு வழங்கப்படவுள்ளது. இதற்கான அறிவிப்பை இஸ்ரேல் அதிபர் ஐசக் ஹெர்ஸாக் வெளியிட்டுள்ளார்.

ஃபிளை துபாய் விமானத்தையும் பயணிகளையும் காப்பாற்றிய 6 பேருக்கு டெல் அவிவ் நகரிலுள்ள அதிபர் மாளிகையில் நேற்று நடைபெற்ற விழாவில் விருது வழங்கப்பட்டது. அப்போது அதிபர் ஐசக் ஹெர்சாக்,"இஸ்ரேலின் உயரிய வீரதீரச் செயல் விருது விரைவில் பைலட் ஸ்மித் மச்சாருக்கு வழங்கப்படும். அவர் விரைந்து குணமடைய நான் வாழ்த்துகிறேன். அவர் குணமடைந்து வீடு திரும்பியதும் அவருக்கான விருது வழங்கப்படும்" என்றார்.

## கனடா எழுத்தாளர் ஆன் கார்சனுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு

**ஸ்டாக்ஹோம், அக்.11:** கனடா எழுத்தாளர் ஆன் கார்சனுக்கு (76) இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டு உள்ளது. உலகம் முழுவதும் இருந்து 200 எழுத்தாளர்களின் பெயர்கள் இலக்கிய நோபல் பரிசுக்கு பரிந்துரை செய்யப்பட்டன. இதில் இருந்து 20 பேரின் பெயர்கள் இறுதிச் சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டன. அவர்களில் கனடாவை சேர்ந்த எழுத்தாளர் ஆன்கார்சனுக்கு நேற்று இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

## தமிழகத்தில் நிலங்களின் வழிகாட்டி மதிப்பு 15 சதவீதம் வரை உயர்வு?

**சென்னை, அக்.11:** தமிழகத்தில் வீடு மற்றும் மனை விற்பனை பத்திரப்பதிவிற்கான நில வழிகாட்டி மதிப்பை15 சதவீதம் வரை உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளதாக பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது.

*10 ஆண்டுகால முரண்பாடுகள்*

தமிழகத்தில் சொத்து பதிவின் போது வழிகாட்டி மதிப்பின் அடிப்படையிலேயே முத்திரைத்தாள் கட்டணமும், பதிவு கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. இதற்கான சர்வே எண் மற்றும் தெரு வாரியான நில மதிப்பு பட்டியலை பதிவுத்துறை வெளியிட்டுள்ளது. ஆனால், இந்த வழிகாட்டி மதிப்புகள் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக முழுமையாக சீரமைக்கப்படாமல் உள்ளன.

இதன் காரணமாக, பல இடங்களில் சர்வே எண்களுக்கு முறையான மதிப்பு இல்லாமலும், குடியிருப்பு பகுதிகளில் உள்ள வணிக கடைகளுக்குச் சரியான வழிகாட்டி மதிப்பை நிர்ணயிக்க முடியாமலும் பல்வேறு குளறுபடிகள் நீடித்து வருகின்றன. மேலும், பெரும்பாலான இடங்களில் வணிக மதிப்பு வகைப்பாடு மாற்றம் மற்றும் சொத்து மதிப்பில் பெரும் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

இந்த முரண்பாடுகளை களைந்து வழிகாட்டி மதிப்பை சீரமைக்கும் வகையில், கிராமங்கள் மற்றும் சார்பதிவக எல்லை வாரியாக புதிய வரைவு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழுக்கள் தயாரித்த இந்த புதிய



வரைவு மதிப்புப் பட்டியல், தற்போது பொதுமக்கள் பார்வைக்காக மாவட்ட வாரியாக வெளியிடப்பட்டுள்ளது.

*அதிகாரி விளக்கம்*

இது குறித்து பதிவுத்துறை உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், "நில வழிகாட்டி மதிப்புகளில் உள்ள முரண்பாடுகளை முழுமையாக சரிசெய்யும் பணிகள் தற்போது தீவிரமாக நடந்து வருகின்றன. இதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் புதிய வழிகாட்டி மதிப்புகள், வழக்கமான மதிப்பை விட 15 சதவீதம் வரை அதிகமாக இருக்கும். இந்த வரைவு அறிக்கைக்கு மாநில மையக்குழுவின் ஒப்புதல் பெற்றவுடன், புதிய நில வழிகாட்டி மதிப்புகள் அதிகாரப்பூர்வமாக அமலுக்கு வரும்," என்று தெரிவித்தார்.

வழிகாட்டி மதிப்பு உயர்த்தப்பட்டால் வீடு, மனை வாங்குபவர்களுக்கான பத்திரப்பதிவு செலவு அதிகரிக்கும் என்பதால், இந்த அறிவிப்பு ரியல் எஸ்டேட் துறையினர் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பையும் பரப்பரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

## டெல்லி கைது நடவடிக்கைகள் ஜனநாயகத்தையே அழிக்கும் செயல்: மு.க.ஸ்டாலின் கண்டனம்



**சென்னை, அக்.11:** திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "இன்று டெல்லியில் அரங்கேறி வரும் நிகழ்வுகளும், அமைதிவழியில் போராடுபவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகளும், நான் அனுபவித்த நெருக்கடிநிலைக் காலத்தின் வலிமிகுந்த நினைவுகளை மீண்டும் கண்முன் கொண்டுவருகின்றன.

டெல்லியிலும் நாடு முழுவதிலும் கைது செய்து வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்கள், மாணவர்கள், போராடும் இளைஞர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் போராடும் மாணவர்கள் மீது, பாஜகவின் கிளையாகச் செயல்பட்டுக்கொண்டு, காவல்துறை அடக்குமுறையை ஏவிவிடும் தவெக அரசையும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

அமைதிவழியில் போராடுவதற்கான தங்களது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தும் இளைஞர்கள் மீதான தாக்குதலை ஒன்றிய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். எதிர்ப்பை வெளிப்படுத்துவது குற்றமல்ல. ஜனநாயகத்தைக் காப்பதற்காக எழும் குரலை ஒடுக்குவது ஜனநாயகத்தையே அழித்துவிடும்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்பதில் எந்த சமரசத்துக்கும் இடமில்லை. அவர் பதவிவிலகுவதோடு மட்டுமல்லாமல், தேர்தல் ஆணையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள அனைத்து பாதிப்புகளும் சரிசெய்யப்பட்டு, அதன் சுதந்திரமும் நேர்மையும் மீட்டெடுக்கப்பட வேண்டும்" என்று பதிவிட்டுள்ளார்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி டெல்லியில் இன்று (அக்.10) சிஜேபி சார்பில் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. இந்தச் சூழலில் போராட்டத்துக்கு டெல்லி காவல் துறை அனுமதி மறுத்துள்ளது. இதனால், அதிரடி கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், ஒற்றை நபரை காக்க மத்திய அரசு அதன் படை பலத்தை பயன்படுத்துகிறது. இதனால் டெல்லி முடங்கியுள்ளது என்று ஆம் ஆத்மி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

அந்த வரிசையில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினும் தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளார்.

## ரூ.65 கோடி மதிப்பீட்டில் 356 புதிய வாகனங்கள்: சென்னை மாநகராட்சி ஆணையாளர் தொடங்கி வைத்தார்



**சென்னை, அக்.11:** திடக்கழிவு மேலாண்மைக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் முன்னேற்பாடுகளை மேம்படுத்தவும் ரூ.65 கோடி மதிப்பீட்டில் 356 புதிய வாகனங்களை சென்னை மாநகராட்சி ஆணையாளர் தொடங்கி வைத்தார்.

இதுதொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

சென்னையின் திடக்கழிவு மேலாண்மைக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், 2026-ஆம் ஆண்டின் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் முன்னேற்பாடுகளை மேம்படுத்தவும், சுமீத் எல்கோவின் ஏற்கனவே உள்ள வாகன தொகுப்புடன் ரூ.65 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 356 புதிய வாகனங்களும், 2,873 குப்பைத் தொட்டிகள் மற்றும் உபகரணங்களும் சேர்க்கப்பட்டு, அதன் பயன்பாட்டினை மாநகராட்சி ஆணையாளர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., இன்று (10.06.2026) தேனாம்பேட்டை மண்டலம், லாயிட்ஸ் காலனியில் தொடங்கி வைத்தார்.

மேலும், மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் மாநகரை தூய்மையாக பராமரிப்பதிலும், பருவமழை காலத்திலும் அத்தியாவசிய பணிகள் தொடர்ந்து நடைபெறுவதை உறுதி செய்வதிலும் முக்கிய பங்காற்றும் தூய்மைப் பணியாளர்களை பாராட்டும் வகையில், அவர்களுக்கு சீருடைகள் மற்றும் மழைக்கோட்டுகளையும் வழங்கினார்.

சென்னையின் திடக்கழிவு மேலாண்மை கட்டமைப்பை வலுப்படுத்தவும், 2026-ஆம் ஆண்டின் வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் முன்னேற்பாடுகளை மேம்படுத்தவும், ஏற்கனவே உள்ள வாகன தொகுப்புடன் கூடுதலாக 356 புதிய வாகனங்களும், 2,873 குப்பைத் தொட்டிகள் மற்றும் உபகரணங்களும் சேர்க்கப்பட்டுள்ளது.

இதில் 283 மின்கலத்தில் இயங்கும் வாகனங்கள் (BOVS), 37 குப்பை அழுத்தும் வாகனங்கள் (REFUSE COMPACTORS), 28 இரண்டு டன் திறன் கொண்ட வாகனங்கள், 7 கொக்கி மூலம் கழிவுத் தொட்டிகளை ஏற்றும் வாகனங்கள் (HOOK LOADERS), 1 இயந்திர பெருக்கி வாகனம் (MECHANICAL SWEEPER), 2,854 எண்ணிக்கையிலான 1,100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குப்பைத் தொட்டிகளும், 18 எண்ணிக்கையிலான 20 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட ஸ்கிப் தொட்டிகளும் அடங்கும்.

*களப்பணிக் குழுக்கள்*

இந்தக் கூடுதல் வசதிகள் மூலம் குப்பைகளை சேகரித்தல் மற்றும் எடுத்துச் செல்லும் பணிகள் வலுப்பெறும். குறிப்பாக, அதிக அளவில் உருவாகும் கழிவுகளைக் கையாள்வதுடன், கனமழையின்போது அதிக அளவில் குப்பைகள் சேரும் பகுதிகளில் களப்பணிக் குழுக்கள் விரைவாகச் செயல்படவும் உதவும்.

இதன் மூலம், பருவமழை காலம் முழுவதும் குப்பைகளை உரிய நேரத்தில் அகற்றுதல், சாலைகளை தூய்மையாக பராமரித்தல் மற்றும் தடையற்ற திடக்கழிவு மேலாண்மைச் சேவைகளை உறுதி செய்தல் ஆகியவை நோக்கமாக கொண்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், துணை ஆணையாளர் (சுகாதாரம்), தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப., சுமீத் எல்கோ நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் மஹ்மூத் சையத் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




Owned, Printer and Published by G.SASIREKA. Published from No:28, 2nd Avenue, Ashok Nagar, Chennai-83 Printing at Annai Abirami Achagam, No. 24, Vengu Chetty Street, Punga Nagar, Chennai - 600 003. Editor: S.SENTHILKUMAR, Office: No:9, 4th Block, Veeramamunivar Street, Mogappair East, Chennai - 37.